1982 செப்டம்பர் 7]

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்துக் கழகங்களே ஏற்று தொழிலாளர்களுக்காக நடத்துகிற இந்தச் சிற்றுண்டிச் சாலைகளில் தனியார் நிறுவனங்களில் இருப்பதைப் போல சப்சிடைஸ்ட் ரேட்டுகளில் குறைந்த விலையில் 10 காசு இட்டிலிகள், 20 காசு பொங்கல் என்பது போன்று, டி.வி.எஸ். நிறுவனங்களில் கூட கொடுக்கிறார்கள். அது போல் கொடுப்பதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்படித்தான் இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு, வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

நாட்டுடமைத் திட்டங்கள் வெளியிடப்பட்டு மனுக்கள் பரிசிலிக்கப்படாமலுள்ள புதிய வழித்தடங்கள்

*வினா எண் 18—திரு. கே. நாராயணசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) புதிய வழித்தடங்கள் தருவதற்காக மாவட்ட போக்குவரத்து அதிகாரிகளால் மனுக்கள் கோரப்பெற்று பரிசீலிக்கப்படுகின்ற நேரத்தில், அதே வழித்தடங்களுக்கு நாட்டுடமைத் திட்டங்கள் வெளியிட்டு அந்த மனுக்கள் பரிசீலிக்கப்படாமல் மாவட்ட போக்குவரத்து அதிகாரிகளிடம் உள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மனுக்கள் எத்தனை ? வழித்தடங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) மனுக்கள் 432; வழித்தடங்கள் 67.

திரு. கே. நாராயணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்துகளுக்கு புதிய வழித்தடங்கள் கொடுக்கும் விஷயமாக, அதை நடைமுறைப்படுத்த, பி.டி.சி. யிலிருந்து ஒரு அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். அவர் 4 மாத காலமாக புது மாற்று வழித்தடங்கள் கொடுப்பதிலோ அல்லது இருக்கிற வண்டிகளுக்கு வேரியேஷன் கொடுப்பதிலோ செயல்படாமல் இருக்கிறாரே, அவருக்கு எப்போது அதிகாரம் கொடுக்கப்போகிறீர்கள் ? உடனடியாக அவருக்கு அதற்கான அதிகாரங்களைக் கொடுத்து, இவைகளை அமுல்படுத்த அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1982 செப்டம்பர் 7

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, வேரியேஷனைப் பொறுத்தவரையில் எந்தத் தடையும் இல்லை, கொடுக்கலாம் என்று உத்தரவு போட்டாகிவிட்டது. புதிய வழித்தடங்கள் கொடுப்பதைப் பொருத்தவரையில், எந்தெந்த தடங்களில் பேருந்துகளை இயக்கினால் லாபகரமாக இருக்கும் அல்லது தேவையாக இருக்கும் என்று ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறோம். விரைவில் அந்த ஆய்வு முடிந்து விடும். அது முடிந்தவுடன் அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படும்.

திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே டவுன் பஸ் விடவேண்டும் என்று கோரிக்கை கொடுத்தேன். அதனை இதுவரைக்கும் இந்த அரசு பரிசீலிக்காமல் இருக்கிறது. அதற்கான கோரிக்கையை சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் கொடுத்தும் இன்னும் டவுன் பஸ் வரவில்லையே என்று தொகுதி பொது மக்கள் மத்தியில் ஒரு அதிருப்தி நிலவுகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த அதிருப்தியை நீக்கும் வகையில் நடவடிக்கை எடுப்பாரா, ஏதாவது அறிவிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒட்டு மொத்தமாகத்தான் அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியும். இதனால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு ஏதோ கெட்ட பெயர் வந்திருப்பதாகச் சொன்னார்கள். அவர் மீது ஒன்றும் இதில் தவறு இல்லை என்று வேண்டுமானால் அறிவித்துவிடத் தயாராக இருக்கிறேன். (சிரிப்பு) அவருடைய கோரிக்கையின் மீது நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி எடுக்கும்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிடப்பில் இருக்கிற மனுக்கள் பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு நட்டத்தில் இயங்கக் கூடிய வழித்தடங்கள் இருந்தால், தனியார்களுக்கு அந்த இடங்களில் அவர்களுடைய பேருந்துகளை விட, அந்த வழித்தடங்களை அவர்களுக்குக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது போன்ற பிரச்னைகளைத்தான் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னேன். இவைகள் தான் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். எனவே கிடப்பில் இருக்கிற அந்த மனுக்களை விரைவில் பரிசீலிக்கக் கூடிய சூழ்நிலை நிச்சயமாக வரும்.

1982 செப்டம்பர் 7]

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேரியேஷன் கொடுப்பதற்கு அரசு உத்தரவு அளித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி வேரியேஷன் கொடுக்கிற போது, ஏற்கெனவே டவுன் வண்டிகள் செல்கிற இடங்களில், அரசு நன்கு ஆலோசனை செய்து, அப்படி டவுன் வண்டிகள் செல்கிற இடங்களிலாவது தனியார்களுக்கு வேரியேஷன் கொடுப்பது நிறுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அப்படி வேரியேஷன் கொடுக்கிற நேரத்தில், அந்தப் பேருந்துகள் போகிற இடங்கள் பொதுமக்களுக்குப் பயன் ஏற்புடையதாக இருக்குமா என்று பார்த்துத் தான் கொடுக்கிறோம். அதே போல சில இடங்களில் கர்டெய்ல்மெண்ட் கேட்கிறார்கள். அதிலேகூட பொதுமக்களுக்கு இடையூறு இருக்குமேயானால் கொடுக்கக்கூடாது என்று உத்தரவிட்டுள்ளோம், அந்த அடிப்படையில்தான் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது, பொதுவாக லாபகரமாக இயங்கக்கூடிய வழித் தடங்களில் பேருந்துகள் விட்டுக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் என்னுடைய தொகுதியில் கள்ளக் குறிச்சி—சின்னசேலம் இடங்களுக்கு ஆத்தூரிலே இருந்து வரக் கூடிய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை அவைகள் லாபகரமாக இயங்கியும், கடந்த 4, 5 மாதங்களுக்கு மேலாக நிறுத்திவைக்கப்பட்டிருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? அது சம்பந்தமாக அங்கே உள்ள பொதுமக்கள் அதிருப்தியோடு இருக்கிறார்கள். இதுபற்றி நான் அவர்களிடம் கூறியபோது, ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். இதுபோல் தமிழகத்தில் 73 பஸ் ரூட்டுகள் நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அவைகளை உடனடியாக மீண்டும் அந்தந்தப் பகுதிகளுக்கு விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, சில வழித்தடங்களில் பல்வேறுபட்ட சிக்கல்களின் காரணமாகக் கூட பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் அது பொதுமக்களுக்கு இடையூறாக இருக்குமேயானால் அந்தப் பேருந்துகளை அங்கே இயக்குவதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டாது. எவ்வளவு இருந்தாலும் இன்றையதினம் இருக்கும் ஒரு முக்கியமான சூழ்நிலையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். டீசல், பெட்ரோல் போன்ற எரிபொருள்களின் விலை உயர்வை எண்ணிப்பார்ப்போமேயானால், அவைகள் மிக மிக அத்தியாவசியமான தேவைகளுக்கே பயன்படுத்தப் பட வேண்டும் என்பது பொருத்தமாக இருக்கும். அதில் அபிப்பிராய பேதம் இருக்காது என்று நான் கருதுகிறேன்.